(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தமாக கட்டிடம் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன. மதிப்பீடுகள் பெறப்பட்டதும் நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலித்து கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்பு தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்று சொல்லுவதற்கே இடம் இல்லை என்ற சொல்லுக்கு ஏற்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு பணம் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது? எப்போது இப்பணி ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான மதிப்பீடுகள் கோரப்பட்டிருக்கின்றன. மதிப்பீடுகள் வந்தவுடனே வருகிற நிதி ஆண்டில் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 120. டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

120–

காதி கிராம சர்வோதய சங்கத்தின் மூலம் நூற்பு நிலையம் அமைத்தல்.

** 21534–டாக்டர் மு. சீனியம்மாள்:*

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவிநாசி, அன்னூர் ஒன்றியம், மாணிக்கம் பாளையத்தில் காதி கிராம சர்வோதய சங்கத்தின் மூலம் நூற்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1993 டிசம்பர் 31]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது பம்பாய் கதர் ஆணைக்குழு புதிய கிராமிய நூற்பு நிலையம் அமைக்க தேவைப்படும் இராட்டை செட்டுகளை வழங்குவதில்லை. எனவே, அவினாசி, அன்னூர் ஒன்றியம், மாணிக்கம் பாளையத்தில் கிராமிய நூற்பு நிலையங்களை, காதி கிராம சர்வோதய சங்கத்தின் மூலம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நூறு சதவீதம் கல்வி பயின்று ஜப்பானைப் போன்று தொழிலில் புரட்சிப் படைக்க புதுமைகளைப் புகுத்திக் கொண்டிருக்கிற எங்கள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண் உறுப்பினர்களை எல்லாம் 31 சட்டமன்ற உறுப்பினர்களுடன் மேலை நாடுகளுக்கு அனுப்பி அங்குள்ள கலாச்சாரத்தை அறிந்துவர செய்தமைக்காக அக்குழுவின் அனைவரின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவினாசி தொகுதி தொழிலில் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால் வேலைவாய்ப்பு இல்லாது காத்திருக்கின்ற ஏழை எளிய பெண்கள், ஆண்கள் மற்றும் வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்போர் அனைவரும் பயன்பெறுகிற வகையில் நமது அரசு தனியார் நிறுவனமாக இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆதரவோடு பரிந்துரை செய்து இதை அவினாசி தொகுதிக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியைப் பற்றி நான் நன்கு அறிவேன். அவினாசிப் பகுதியில் ஏற்கனவே 25 கிராமிய நூற்பு நிலையங்கள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தெய்வத்தாய், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான ஆட்சிக் காலத்தில்தான் மிகச் சிறப்பான முறையில் 25 கிராமிய நூற்பு மையங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் 426 பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.10

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியில் இருந்தபோதிலும்கூட, அன்னூர் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, அந்த ஆலைகளை அன்னூர் பகுதிக்கு மாற்றிக் கொடுத்து அங்குள்ள பெண்களும், நம்முடைய தமிழக முதல்வருடைய ஆட்சியில் சமபங்காக வேலை பார்ப்பதற்கு தகுதியுள்ள இடத்தை தேர்வு செய்து அமைத்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னூர் பகுதியில் வேண்டுமென்றால் புதிதாக அமைக்கலாமே தவிர, வேறு பகுதியில் இருக்கும் நூற்பு மையங்களை மாற்றியமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த நூற்பு மையங்கள் கிட்டத்தட்ட சுமார் 2 இலட்சம் செலவிலே கட்டப்படுகிறது. எனவே மாற்றி அமைக்கும்பொழுது அந்தக் கட்டிடம் பயனில்லாமல் போய்விடும். எனவே தேவையைக் கருதி, வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

117–

திருத்தணி நகருக்கு புதிய பேருந்து நிலையம் ஏற்படுத்துதல்.

***10466–திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

திருத்தணி நகரியத்தில் தற்போது உள்ள பேருந்து நிலையம் போதுமானதாக இல்லாததால் தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய இடத்தில் பணி துவங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஆம்.